# பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்களின் சிறப்புகள்

**இரா.மாரிமுத்து**
முனைவர்பட்ட ஆய்வாளர்
கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலம்
வேதாரண்யம்

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** I
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

## முன்னுரை

பத்துப்பாட்டென்னும் செந்தமிழ் இலக்கியத்தில் மலையின் சிறப்புப் பற்றிக்கூறும் மலைபடுகடாம் என்னும் நூலை இயற்றியவர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் என்னும் நல்லிசைப் புலவர் ஆவார். இப்பத்துப்பாட்டின் இறுதி வைப்பே மலைபடுகடாம் ஆகும். இது கூத்தராற்றுப்படை என்றும் அழைக்கப்படுகிறது.

இந்நூலின் வழி இசைத்தமிழின் உணர்ச்சியும், அக்காலத்தில் இருந்த யாழ் முதலிய இசைக்கருவிகளையும், இசைக்கருவிகளின் பண்ணியல்பும் தெளிவாக அறியமுடிகிறது. பண்டைய நாளிலிருந்து தமிழ்நாட்டின் ஐவகை நிலங்களின் இயல்பும், அந்நிலங்களில் வாழும் மக்களின் இயல்பும், அக்காலத்து மன்னர்களின் இயல்பும் சிறந்த தலைநகரங்களின் தன்மையும் இவ்வியலில் கூறப்படுகிறது. இவற்றைப் பற்றியச் செய்திகள் தொல்காப்பியத்தில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன.

**ஊரும் பெயரும் உடைத்தொழிற் கருவியும்**
**யாரும் சார்த்தி அவையவை பெறுமே' - (தொல்.மரபு.74)**

## நாட்டின் சிறப்பு

நன்னனின் நாடு இயற்கை வளம் மிகுந்தது. மலையின் மேலிருந்து விழும் அருவிகளும், மலர்கள் நிறைந்த நிலப்பரப்பையும், பல ஓசைகளையும் உள்ளடக்கிய சிறப்பு வாய்ந்த நாடு என்று கூறப்படுகிறது. இவற்றைப் பற்றியச் செய்திகள் கூத்தராற்றுப்படையில் காணப்படுகின்றன. பிற நாட்டில் இல்லாதச் செல்வத்தைக்காட்டிலும் நன்னனின் நாட்டில் உணவுப் பொருள்களும், அருவிகளும் மிகுந்து இருந்தன. இவற்றில் மலைகளின் தன்மையும் பொழில்களின்தன்மையும், விலங்குகள் விரும்பித்திரியும் காட்டின்தன்மையும் காணப்படுகின்றன.

**“தலைநாள் விடுக்கும் பரிசின் மலைநீர்**
**வென்றெழு கொடியிற் றோன்றும்**
**குன்றுசூழ், இருக்கை நாடுகிழவோனே” - (ம.ப.க.581-583)**

என்றும்

**“ஆற்றின் அளவும் அசையநற் புலமும்**
**வீற்றுவளஞ் சுரக்கும் அவனாடுபடு வல்சியும்**
**மலையும் சோலையும் மாபுகல் கானமும்” - (ம.ப.க.67-69)**

என்றும் நாட்டு வளம் பற்றிய செய்திகள் பிற இலக்கியங்களிலும் காணப்படுகின்றன.

**“நாடென்ப நாடா வளத்தன நாடல்ல**
**நாட வளந்தரு நாடு” - (குறள்.739)**

என்று திருக்குறளிலும்,

**“நாடா கொன்றோ காடா கொன்றோ**
**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நலனே” - (புறம்.183)**

என்று புறநானூற்றுப் பாடலிலும் நாட்டு வளத்தையும், நாட்டின் பல்வேறு சிறப்பும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

**மலைகள்**

ஆற்றுப்படை நூல்களில் மலைகளைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. மலைகளை ‘யானைமலை’ என்றும் ‘நவிர மலை’ என்றும் ‘பக்க மலை’ என்றும் கூறுகின்றன. இம்மலைகளில் பூக்களின் மணமும் பலாப்பழத்தின் மணமும் வீசுகின்றன. மேலும் அருவிகளின் ஓசையும் பல இசைக்கருவிகளின் ஓசையும் பற்றிக் கூறப்பட்டுள்ளன.

**“உயர்நிலை மாக்கற் புகர்முகம் புதைய**
**மாரியி னித்தரு வில்லுமிழ் கடுங்கனைத்**
**தாரொடு பொலிந்த சுடர்ப்பூ விலஞ்சி**
**ஓரியாற் றியவின் முத்த புரிசைப்**
**பராவடு மரபிற் கடவுட் காணின்.” - (ம.ப.க.225-230)**

இப்பாடலில் பெரிய மலையில் தேனீக்கள் சேர்த்து வைத்த தேனைக் குரங்குகள் எடுத்துச்செல்கின்றன், என்று கூறப்படுகிறது. உயர்ந்த மலையின் சிறப்பையும், அதன் எழில்வளத்தையும் கீழ்காணும் கூத்தராற்றுப்படையில் எடுத்துரைத்துள்ளன. இதனை

**கலைகை யற்ற காண்பின் நெடுவரை**
**நிலைபெயன் திட்ட மால்பு நெறி யாகப்**
**பெரும்பய் தொகுத்த தேங்கொள் கொள்கை - (ம.ப.க.315-317)**

என்னும் பாடலடிகளின்வழியே அறியலாம். இவற்றைப் பற்றிய செய்திகள் நாலடியாரில் காணப்படுகின்றன.

**உடா அதும் உண்ணாதுந் தம்முடம்பு செற்றும்**
**கெடா அத நல்லறமும் செய்யாய் - கெடாது**
**வைத்திட்டி னார்கிழப்பர் வான்றோய் மலைநாட**
**உய்த்தீட்டுந் தேனீக்கரி - (நாலடி.10)**

**நிலத்தின் தன்மை**

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்து நிலங்களையும், அவற்றில் விளையும் பயிர்களையும்பற்றிக் கூறுகிறது. குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் தினை முதலியன விளைந்தமையும் அக்கவண்கல் செல்லும் வகையினையும் பற்றிக் கூறுகிறது. அதுவே,

**அகன்மலை யிறும்பில் துவன்றிய யானைப்**
**பகனிலை தளர்க்கும் கவணுமிழ் கடுங்கல்**
**இருவெதிர் ஈர்ங்கழை தத்திக் கல்லெனக் - (ம.ப.க.205-207)**

என்றும்

**இலங்கொளி மருப்பிற் கைம்மா வுளம்புறர்**
**புலங்கடி ஆவணையிற் பூஞ்சினை உதிர்க்கும்**
**விலங்குமலை - (கலி.21:1-3)**

மேலும்,

**“பிடியொடு மேயும் செய்யும் யானை**
**அடியொதுந் இயங்கங் கேட்ட கானவன்**
**நெடுவரை யாசினிப் பணவை ஏறிக்**
**கருவிசைக் கவணையிற் கல்கை விடுதலின்**
**இறுவரை வேங்கையின் ஒள்வீ சிதறி**

**ஆசனி மென்பழம் அளிந்தவை உதிராத்**
**தேன்செய் இறாஇல் துளை படப் போகி**
**நறுவடி மாவின் பைந்துணர் உழக்கிக்**
**குலையடை வாழைக் கொழுமடல் கிழியாப்**
**பலவின் பழத்தாள் தங்கும் மலை" - (கலி, 41:1-3)**

**இயற்கை உணர்த்தும் அறிவியல்**

வானத்தில் மிளிரும் கார்த்திகை மீன்கள் போன்று முசுண்டை மலர்ந்து மிளிருகிறது என்றும் காவற்படைகள் போன்ற கருப்பாங்காடுகளும் மழைப் பொழிதலின் அறிகுறிகளைக் கணிப்பதைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

**"அகலிரு விசும்பினாதல் போல" - (ம.ப.க.100)**
**"ஆலைக் கலமருந் தீங்கழைக் கரும்பே" - (ம.ப.க.119)**

இவற்றைப் பற்றியச் செய்திகள் 'உண்மை விளக்கம்' என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**"மண்கடின மாய்திரிக்கும் வாரி குளிர்ந்த தேபதமாம்**
**ஒண்கனல்சுட் டொன்றுவிக்கும் ஓவாமல்- வண்கால்**
**பரந்துசலித் துத்திரட்டும் பார்க்கின் ஆகாயம்**
**நிரந்தரமாய் நிற்கும் நிறைந்தது" - (உ.வி.9)**

இவற்றில் நிலம், நீர், காற்று, தீ, வளி என்னும் ஐம்பூதங்களைப் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. மேலும்,

**"குறியவும் நெடியவும் குன்றுகண்டன்ன**
**கடுமனோங்கிய நெடுநிலைக் கோட்டமும்" - (மணிமேகலை 58.59)**

மகளிர்கள் வேங்கைப் பூவைப் பறிக்கும்போது புலி புலி என்று கூவினால் வேங்கை மரம் வளைந்து கொடுக்கும் என்பது அக்காலத்து அறிவியல் செய்திகளாகப் பரிமாறப்பட்டுள்ளது.

**"துலைநாட் பூத்த பொன்னினர் வேங்கை**
**முலைமா ரிடுஉம் ஏமப் பூசல்" - (ம.ப.க.305-306)**

இவற்றைப் பற்றியச் செய்திகள் அகநானூற்றிலும் காணப்படுகின்றன.

**"மலிபூஞ் சாரல் என்தோழி மாரோ**
**டொலிசினை வேங்கை கொய்குவம் சென்றுழிப்**
**புலி புலி என்னும் பூசல் தோன்ற......." - (அகம்.48)**

**பண்டைக்கால மகளிரின் நிலை**

நன்னன் கற்புடைமையிற் சிறந்த மனைவியைப் பெற்றிருந்தான் என்றும் வியப்புமிக்க இனிய யாழினையுடைய விறலியர் குறிஞ்சிப் பண்ணை வைத்துக்கொண்டு பாடுகிறார்கள் என்றும், மூங்கிலாற் செய்த தட்டையை வைத்துக்கொண்டு குறத்தியர் கிளியை ஓட்டுகிறார்கள் என்றும் நெல், தினை முதலியவற்றை மகளிர் மாறி மாறிப் பாடிக்கொண்டு குற்றுதல் வழக்கம் என்றும் பண்டைய மகளிரின் வாழ்க்கைநிலை பற்றிக் கூறப்பட்டுள்ளன.

**"தினை குறு மகளிர் இசைபடு வள்ளையும்" - (ம.ப.க.342)**

**"ஒலிகழைத் தட்டை புடையநர் புனந்தொறும்**
**கிளிகடி மகளிர் விளிபடு பூசல்" - (ம.ப.க.328-329)**

**முடிவுரை**

ஆற்றுப்படை நூல்களின் சிறப்புகளாக நாட்டின் சிறப்பு, மலைகள், நிலத்தின்தன்மை ஐவகை நிலம் மற்றும் நிலத்தில் வாழ்ந்த மக்கள், தினை முதலியனவும். மலையின் இயற்கைவளம் மற்றும் செய்திகளும் இந்தக் கட்டுரையின் வழியாகக் காணலாம்.

**சான்றெண் விளக்கம்**

1. தொல்காப்பியம், மரபியல் நூ.74.
2. மலைபடுகடாம் 581-583.
3. மலைபடுகடாம் 67-69.
4. குறள் - 739.
5. புறநானூறு பா.183
6. மலைபடுகடாம் 225-230
7. மலைபடுகடம் 315-317
8. நாலடியார் பா.-10.
9. மலைபடுகடாம் 205-207.
10. கலித்தொகை 21:1-3
11. கலித்தொகை 41:1-3
12. மலைபடுகடாம் பா-100
13. மலைபடுகடாம் பா-119
14. உண்மை விளக்கம் பா.9
15. மணிமேகலை பா. 58.59
16. மலைபடுகடாம் 303-306